தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-7-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் ஆப்பிரிக்க நாடுகளின் உயர்மட்ட குழு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 5 ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த உயர் பிரதிநிதிகளுடன் வேளாண்மை தொழில்நுட்பப் பரிமாற்றம் குறித்த கூட்டம் இன்று (5-7-2017) நடைபெற்றது. இந்நிகழ்வில் மாலி, சேய்செல்ஸ், உகான்டா, எத்தியோப்பியா மற்றும் போட்ஸ்வானா நாடுகளைச் சேர்ந்த ஏழு உயர்மட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தியாவிற்கான மாலி நாட்டுத் தூதுவர் உயர்திரு. நியான்கோரோ யே சமேக் தன் உரையில், நீர்ப்பாசனம், வேளாண் இயந்திரங்கள், தரமான விதை, அறுவடை பின்சார் முறைகள், வேளாண் தொழில்நுட்பம் மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகிய துறைகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்தார்.

சேய்சேல்ஸ் நாட்டின் தூதரக உயர் ஆணையர் உயர்திரு. பிலிப் அந்நாட்டின் தன்னிறைவிற்கான உணவு உற்பத்தியில் வேளாண் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்பை வேண்டினார். தங்கள் நாட்டு மாணவர்களுக்கு வேளாண் கல்வியை வழங்க ஒத்துழைப்பு நல்குமாறு பல்வேறு பிரதிநிதிகள் வேளாண் பல்கலைக்கழகத்திடம் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி ஆப்பிரிக்க நாடுகளுடன் இணைந்து செயலாற்ற தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தயாராக இருப்பதாக தெரிவித்தார். மேலும் வேளாண் கல்வி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகிய துறைகளில் அந்நாடுகளுடன் இணைந்து செயல்படும் வாய்ப்புகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் காணொளிக் காட்சி, பேராசிரியர் மோகனின் காப்புரிமை பெற்ற தானிய பூச்சி பொறி செயல்விளக்கம், கல்லூரி முதல்வர்கள் மற்றும் இயக்குனர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஆகியவை நடைபெற்றன. மேலும், பல்கலைக்கழகத்தின் பல்வேறு வசதிகளை நேரில் கண்டறிந்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்